# மாலத்தீவு குடியரசின் அதிபராக தேர்வு செய்யப்பட்ட திரு அப்துல்லா யாமின் அப்துல் கயூமிற்கு பிரதமர் வாழ்த்து

நவம்பர் 18, 2013

மேதகு அதிபர் அவர்களே,

அதிபர் தேர்தலில் உங்கள் வெற்றிக்கு எனது இதயம் கனிந்த வாழ்த்துக்களை தெரிவிப்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. உங்களது இந்த வெற்றி மாலத்தீவின் ஜனநாயக பன்முகத்தன்மைகொண்ட சக்திகளின் வெற்றி ஆகும். உங்கள் தலைமையில் மாலத்தீவு நிலைத்தன்மை, அமைதி, முன்னேற்றம் மற்றும் வளர்ச்சிப்பாதையில் முன்னெட்டிச்செல்லும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

இந்தியாவும் மாலத்தீவுகளும் வரலாற்று ரீதியான, கலாசார மற்றும் நாகரீக ரீதியான உறவுகளால் கட்டப்பட்டுள்ளன. நமது புவியியல் ரீதியான நெருக்கம், இரு நாடுகளுக்கும் இடையேயான நெருக்கமான மற்றும் நேசமான உளவுகளுக்கான வலுவான அடித்தளத்தை ஏற்படுத்த வகை செய்துள்ளது. இந்த ஆண்டு தொடக்கத்தில் புது தில்லியில் நாம் இருவரும் சந்தித்த சூழல் குறித்து இங்கே வலியுறுத்த விரும்புகிறேன். இந்தியா மாலத்தீவுடனான உறவு குறித்து மிகுந்த முக்கியத்துவத்தை வழங்குகிறது. உங்கள் பொறுப்பினை ஏற்க தயாராகி வரும் சூழலில் உங்கள் பதவிக்காலம் வெற்றிகரமாக அமைய நான் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். மாலத்தீவு மக்களின் அமைதி மற்றும் வளமான எதிர்காலத்திற்கு நீங்கள் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு இந்தியாவின் முழு ஆதரவினை வழங்க உறுதி அளிக்கிறேன்.

மேதகு அதிபர் அவர்களே என் வாழ்த்துக்களை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மன்மோகன் சிங்)